TIP/SS/01/03 2016.07.14

வியாபார மற்றும் முதலீட்டுக் கொள்கை சுற்றறிக்கை இலக்கம் : 01/2016

சனாதிபதி செயலாளர்,

பிரதமரின் செயலாளர்,

அமைச்சரவையின் செயலாளர்,

ஆணைக்குழுக்களின் செயலாளர்கள்,

அமைச்சுக்களின் செயலாளர்கள்,

மாகாண பிரதம செயலாளர்கள்,

திணைக்களங்களின் தலைவர்கள்,

அரச கூட்டுத்தாபன மற்றும் நியதிச்சட்டமுறை நிறுவனங்களின் தலைவர்கள் யாவருக்கும்.

## சலுகை அடிப்படையில் மோட்டார் வாகன அனுமதிப்பத்திரத்தை வழங்கும் திட்டம்

சலுகை அடிப்படையில் மோட்டார் வாகனங்களை வழங்குவது தொடர்பான சகல திட்டங்களும் 2015.11.20 ஆம் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்ட வரவு செலவு திட்ட முன்மொழிவின் பிரகாரம் இரத்துச் செய்யப்பட்டது. அதன் பின்னர் நிதியமைச்சரினால் மேற்குறிப்பிட்ட விடயத்தின் கீழ் சமர்ப்பிக்கப்பட்ட 2016.03.26 ஆம் திகதிய MFs/PA/CP/16/47 ஆம் இலக்க அமைச்சரவை விஞ்ஞாபனம் தொடர்பில் 2016.05.24 ஆம் திகதியன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக இந்தச் சுற்றறிக்கை வெளியிடப்படுகின்றது.

அதன் பிரகாரம் அரசாங்க சேவையில் அரசாங்க கூட்டுத்தாபனம் மற்றும் நியதிச் சட்டமுறைச் சபைகளில் சேவையாற்றுகின்ற சிரேஷ்ட நிறைவேற்று தரத்திலுள்ள நிருவாக, முகாமைத்துவ மற்றும் தொழில்ரீதியான பதவிகளில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களுக்காக சலுகை அடிப்படையில் மோட்டார் வாகனங்களை இறக்குமதி செய்வதற்காகவும் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட மோட்டார் வாகனங்களைக் கொள்வனவு செய்வதற்காகவும் ஏற்புடையதாகின்ற ஏற்பாடுகள் இதன் மூலம் விதிக்கப்படுகின்றது. இந்த அனுமதிப்பத்திரம் மற்றும் அது தொடர்பான வசதிகள் எந்தவொரு விதத்திலும் உரிமையொன்றாக கவனிக்கப்படலாகாது. அதேவேளையில் அரசாங்கத்தினால் காலத்திற்குக் காலம் எடுக்கப்படுகின்ற கொள்கை ரீதியான தீர்மானங்களுக்கு இந்தச் சுற்றறிக்கை ஏற்புடையதாகும்.

### 1. உரிமை பெறுகின்ற சந்தர்ப்பங்கள்

பின்வரும் ஏதேனும் பதவியொன்றிலோ அல்லது பல பதவிகளிலோ உரிய செயலூக்க சேவைக் காலத்தைப் பூர்த்திசெய்துள்ள மற்றும் அந்தப் பதவிகளில் நிரந்தர சேவைக் காலத்தைக் கொண்டுள்ள உத்தியோகத்தர்களுக்கு இந்த அனுமதிப்பத்திரம் உரித்தானதாகும்.

1.1 2006.04.25 ஆம் திகதிய பொது நிருவாக சுற்றறிக்கை இலக்கம் 06/2006 இல் குறிப்பிடப்பட்டுள்ள "சிரேஷ்ட நிலை" இற்கு உரிய நிறைவேற்றுப் பதவியொன்றில் ஆறு (06) வருட செயலூக்க சேவைக் காலத்தைப் பூர்த்திசெய்துள்ள மற்றும் பதவியில் நிரந்தரமாக்கப்பட்டுள்ள அரசாங்க உத்தியோகத்தர்கள்.

1.2 இலங்கைப் பாராளுமன்றத்தில் "சிரேஷ்ட நிலை" இற்கு உரிய நிறைவேற்றுப் பதவியொன்றில் ஆறு (06) வருட செயலூக்க சேவைக்காலத்தைப் பூர்த்திசெய்துள்ள மற்றும் பதவியில் நிரந்தரமாக்கப்பட்டுள்ள அரசாங்க உத்தியோகத்தர்கள்.

1.3 அமைச்சரவைத் தீர்மானத்தின் மூலம் அரசாங்க நிறுவனங்களில் (அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்டமுறை நிறுவனங்கள் தவிர) "சிரேஷ்ட நிலை" இற்கு உரிய நிறைவேற்றுப் பதவியொன்றிற்கு நியமிக்கப்பட்டு ஆறு (06) வருட செயலூக்க சேவைக் காலத்தைப் பூர்த்திசெய்துள்ள மற்றும் பதவியில் நிரந்தரமாக்கப்பட்டுள்ள அரசாங்க உத்தியோகத்தர்கள்.

1.4 ஆறு (06) வருட செயலூக்க சேவைக்காலத்தைப் பூர்த்திசெய்துள்ள மற்றும் பதவியில் நிரந்தரமாக்கப்பட்டுள்ள முப்படைகளின் லெப்டினனட் கேர்னல், வின்க் கமான்டர், கமான்டர் மற்றும் அதற்கு மேலுள்ள உத்தியோகத்தர்கள்.

1.5 ஆறு (06) வருட செயலூக்க சேவைக்காலத்தைப் பூர்த்திசெய்துள்ள மற்றும் பதவியில் நிரந்தரமாக்கப்பட்டுள்ள முப்படைகளில் உள்ள வைத்தியர்கள், பொறியியலாளர்கள், கணக்காளர்கள், கட்டிடக் கலைஞர்கள் மற்றும் சட்டத்தரணிகளாக சேவையாற்றுகின்ற உத்தியோகத்தர்கள் (இராணுவ பதவியைக் கருதாமல்).

1.6 அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் அரசாங்கக் கூட்டுத்தாபனமொன்றுக்கு அல்லது நியதிச் சட்டமுறை நிறுவனமொன்றுக்கு நியமிக்கப்பட்டுள்ள "சிரேஷ்ட நிலை" இற்கு உரிய நிறைவேற்றுப் பதவியொன்றிற்கு நியமிக்கப்பட்டு பன்னிரண்டு (12) வருடங்கள் செயலூக்க சேவைக்காலத்தைப் பூர்த்திசெய்துள்ள மற்றும் பதவியில் நிரந்தரமாக்கப்பட்டுள்ள அரசாங்க உத்தியோகத்தர்கள்.

1.7 அரசாங்க பல்கலைக்கழகங்களில் கல்விப் பதவியினர்களில் "சிரேஷ்ட நிலைக்கு" உரிய பதவியொன்றிலும் கல்விசாரா பதியினர்களில் "சிரேஷ்ட நிலை" இற்கு உரிய நிறைவேற்றுப் பதவியொன்றிற்கு நியமிக்கப்பட்டு எட்டு (08) வருடங்கள் செயலூக்க சேவைக்காலத்தைப் பூர்த்திசெய்துள்ள மற்றும் பதவியில் நிரந்தரமாக்கப்பட்டுள்ள அரசாங்க உத்தியோகத்தர்கள்.

1.8 பன்னிரண்டு (12) வருடகால செயலூக்க சேவைக்காலத்தைப் பூர்த்திசெய்துள்ள மற்றும் பதவியில் நிரந்தரமாக்கப்பட்டுள்ள இலங்கை மத்திய வங்கியில் சிரேஷ்ட நிலைக்குரிய நிறைவேற்று உத்தியோகத்தர்கள்.

1.9 முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தின் மூலம் அனுமதிக்கப்பட்டுள்ள பதவியணிக்குள் உள்ளடங்குகின்ற தகைமைகளைக் கொண்டுள்ள பதவியொன்றில்;

(i) பன்னிரண்டு (12) வருடகால செயலூக்க சேவைக்காலத்தைப் பூர்த்திசெய்துள்ள மற்றும் பதவியில் நிரந்தரமாக்கப்பட்டுள்ள அரசாங்க கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்டமுறை நிறுவனங்களில் சிரேஷ்ட நிலைக்குரிய நிறைவேற்று பதவியிலுள்ள உத்தியோகத்தர்கள் மற்றும்

(ii) ஒன்பது (09) வருட செயலூக்க சேவைக்காலத்தைப் பூர்த்திசெய்துள்ள மற்றும் பதவியில் நிரந்தரமாக்கப்பட்டுள்ள அரசாங்க கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்டமுறை நிறுவனங்களில் சிரேஸ்ட நிலைக்குரிய நிறைவேற்று பதவியொன்றில் சேவையாற்றுகின்ற அதிகாரம்பெற்ற பொறியியலாளர்கள், அதிகாரம்பெற்ற கணக்காளர்கள் மற்றும் அதிகாரம்பெற்ற கட்டிடக் கலைஞர்கள்.

1.10 பல்கலைக்கழக வேந்தர்கள்

1.11 "பதிவுசெய்யப்பட்ட மருத்துவ உத்தியோகத்தர்" பதவியொன்றில் முதலாவது தரத்தில் 06 வருட செயலூக்க சேவைக்காலத்தைக் கொண்டுள்ள பதவியில் நிரந்தரமாக்கப்பட்டுள்ள "பதிவுசெய்யப்பட்ட மருத்துவ உத்தியோகத்தர்கள்"

1.12 ஒன்பது (09) வருட செயலூக்க சேவைக்காலத்தைக் கொண்டுள்ள அரசாங்கத்தின் அபிவிருத்திக் கருத்திட்டமொன்றிலோ அல்லது கருத்திட்டங்கள் பலவற்றிலோ (ஒப்பந்த அடிப்படையிலாவது) சேவையாற்றுகின்ற கருத்திட்ட முகாமையாளர்கள், அதிகாரம்பெற்ற பொறியியலாளர்கள், அதிகாரம்பெற்ற கணக்காளர்கள், அதிகாரம்பெற்ற கட்டிடக் கலைஞர்கள் மற்றும் சட்டத்தரணிகள்.

1.13 அரசியலமைப்புச் சட்டத்தின் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் தாபிக்கப்பட்டுள்ள ஆணைக்குழு ஒன்றில் மூன்று (03) வருட செயலூக்க சேவைக்காலத்தைக் கொண்டுள்ள ஆணைக்குழுக்களின் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள்

**2. உரிமை பெறாத சந்தர்ப்பங்கள்**

இந்தச் சுற்றறிக்கையின் கீழ் பின்வரும் உத்தியோகத்தர் தொகுதிகள் உள்ளடங்கமாட்டாது.

2.1 இந்தச் சுற்றறிக்கை செயல்வலுப்பெறும் திகதியில் ஏதேனும் ஒரு சலுகை ரீதியிலான மோட்டார் வாகன அனுமதிப்பத்திர திட்டமொன்றின் கீழ் இரண்டு தடவையோ அல்லது அதற்குக் கூடுதலான தடவைகளோ வாகனங்களைப் பெற்றுள்ள உத்தியோகத்தர்கள்.

2.2 சம்பளமற்ற விடுமுறையின் அடிப்படையில் (இதில் 3.4 பிரிவுக்கு உட்பட்டு) விடுவிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள்.

2.3 தகைமை பெறுகின்ற பதவியொன்றிற்கு தனிப்பட்ட முறையிலோ மிகை ஊழியர் அடிப்படையிலோ நியமிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள்.

2.4 அரசாங்க சேவையிலிருந்து ஓய்வு பெற்றுள்ள அல்லது நீக்கப்பட்டுள்ள பின்னர் தகைமைபெறும் பதவியொன்றுக்கு ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள் (மேலே 1.12 பிரிவின் கீழ் வருகின்ற உத்தியோகத்தர்கள் தவிர).

2.5 தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் அல்லது அந்தந்த நிறுவனங்களில் பயன்படுத்தப்படுகின்ற நிருவாக ஏற்பாடுகள் அல்லது ஒழுங்குவிதிகளின் பிரகாரம் ஆரம்ப விசாரணைகளோ அல்லது முறையான ஒழுக்காற்று விசாரணைகளோ ஆரம்பிக்கப்பட்டு தற்போது அந்த நடவடிக்கைமுறை முடிவுறுத்தப்படாதுள்ள உத்தியோகத்தர்கள்.

2.6 இதற்கு முன்னர் ஏதேனுமொரு சலுகை ரீதியான மோட்டார் வாகன அனுமதிப்பத்திரத்தின் கீழ் மோட்டார் வாகனமொன்றைப் பெற்றிருப்பின் அதனைப் பதிவுசெய்த திகதியிலிருந்து 10 வருடங்களைப் பூர்த்தி செய்யாதுள்ள உத்தியோகத்தர்கள்.

2.7 முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தின் மூலம் அனுமதிக்கப்பட்டுள்ள பதவி எண்ணிக்கைகளுக்குப் புறம்பாக நிறுவனத்தினால் ஏற்படுத்தப்பட்டுள்ள பதவியொன்றில் சேவையாற்றுகின்ற உத்தியோகத்தர்கள்.

**3. நிபந்தனைகள், நியதிகள் மற்றும் சலுகைகள்**

3.1 இந்தத் திட்டத்தின் கீழ் வாகனங்களைப் பெற்றுக்கொள்வதற்காக தமது சேவைக்காலத்தினுள் அதிகபட்சமாக 02 தடவைகள் மாத்திரமே உரிமை பெறுவர்.

3.2 சலுகைத் திட்டமொன்றின் கீழ் இதற்கு முன்னர் பெற்றுக்கொண்ட அனுமதிப்பத்திரமொன்றைப் பயன்படுத்தியில்லாத சந்தர்ப்பங்களில் அது பற்றி அனுமதிப்பத்திரம் பெறுநரினால் உறுதிப்படுத்துதல் வேண்டும். அவ்வாறு உறுதிப்படுத்த முடியாத சந்தர்ப்பங்களில் அந்த அனுமதிப் பத்திரங்களைப் பயன்படுத்தியதாகக் கருதப்படும்.

3.3 இந்தச் சுற்றறிக்கையின் பிரகாரம் மேலே "1.1" முதல் "1.9" வரையான தொகுதிகளின் கீழ் தகைமை பெறுகின்ற பதவிகள் பலவற்றில் சேவைக்காலங்களை ஒன்று சேர்த்து உரிய அனுமதிப்பத்திரத்திற்கான சேவைக்காலத்தை கணக்கிடக்கூடியதாக உள்ள அதேவேளையில் அவ்வாறான கோரிக்கைகள் உரிய செயலாளர்களின் பரிந்துரைகளுடன் வியாபர மற்றும் முதலீட்டுக் கொள்கைத் திணைக்களத்திற்கு அனுப்ப வைக்கப்படுவதுடன் தேவைப்பாட்டுக்கு அமைவாக தீர்மானமொன்றை வழங்குவது அல்லது தேவையேற்படின் இதன் 5.1 பிரிவிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும்.

3.4 இந்தச் சுற்றறிக்கையில் செயலூக்க சேவைக்காலம் என்பது தகைமைபெறுகின்ற பதவியொன்றிற்காக உத்தியோகத்தரின் சேவைக்காலத்தைக் கணக்கிடும் போது சேவை

இடைநிறுத்தத்திற்கு உட்படுவதன் மூலம் அரைச் சம்பளத்திற்கு அல்லது சம்பளமற்ற விடுமுறையைப் பெறுவதன் அடிப்படையில் அல்லது வேறு ஏதேனும் காரணமொன்றின் அடிப்படையில் நியமனம் பின்தேதியிடப்பட்டதன் அடிப்படையிலான காலங்களைக் கைவிட்டு கணக்கிடப்படுகின்ற சேவைக்காலமாகும்.

அவ்வாறிருப்பினும் அரசாங்கத்தில், அரசாங்க கூட்டுத்தாபனத்தில் அல்லது நியதிச்சட்ட முறை நிறுவனங்களில் சேவைக்காக அமைச்சரவையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் சம்பளமின்றி தற்காலிகமாக விடுவிக்கப்பட்டுள்ள அரசாங்க கூட்டுத்தாபனத்தில் அல்லது நியதிச்சட்ட முறை நிறுவனங்களின் உத்தியோகத்தர்களின் சொல்லப்பட்ட சம்பளமற்ற சேவைக்காலமும் செயலூக்க சேவைக்காலத்திற்கு உட்பட்டதாகும். பட்டப்பின்படிப்பு கற்கை நடவடிக்கைகளுக்கான சம்பளத்துடனான விடுமுறை, பல்கலைக்கழக பதவியினரின் ஓய்வுக்கான வருடாந்த விடுமுறை, அரைச் சம்பள மற்றும் சம்பளமற்ற விடுமுறை உட்பட பிரசவ விடுமுறை செயலூக்க சேவைக்காலமாக இந்த சுற்றறிக்கையின் தேவைக்காக கணக்கிடப்படுதல் வேண்டும்.

3.5 முன்தேதியிடப்பட்ட காலம் சலுகை ரீதியான மோட்டார் வாகன அனுமதிப்பத்திரத்தை வழங்குவதற்கான செயலூக்க சேவைக்காலமாக கணக்கிடப்படாத போதிலும், யாரேனும் ஓர் உத்தியோகத்தரின் முன்தேதியிடப்பட்ட காலத்தினுள் அவருக்கு தகைமை பெறுகின்ற பதவியொன்றின் பதிற்கடமைக்காக முறையான விதத்தில் நியமனம் வழங்கி, அதன் பிரகாரம் சேவையாற்றியிருப்பின் மாத்திரம் (நியமன அதிகாரியினால் வழங்கப்படுகின்ற முறையான நியமனக் கடிதம் ஒன்றின் மூலம்) அந்த சந்தர்ப்பத்தில் மேற்சொன்ன காலம் மேற்குறிப்பிடப்பட்ட சலுகைக்காகக் கணக்கிட முடியும்.

3.6 மிகை ஊழியர் அடிப்படையில் அல்லது பதவியை வகிப்பவர்க்கு தனிப்பட்ட ரீதியில் அல்லது பதவி வழங்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களின் பதவிகளில் மிகை ஊழியர் அடிப்படையில் அல்லது தனிப்பட்ட முறையில் என்பதை நீக்கியுள்ள சந்தர்ப்பமொன்றின் தொடர்புடைய அடிப்படையை நீக்குவதற்கு தீர்மானிக்கப்பட்ட திகதியல்லாத, சொல்லப்பட்ட தீர்மானம் செயல்வலுப்பெறும் தினத்தை (சாதாரண ஊழியர் அடிப்படைக்கு நியமிக்கப்படுகின்ற தினம்) அடிப்படையாகக்கொண்டு அனுமதிப்பத்திரத்திற்கான சேவைக்காலத்தைக் கணக்கிடுதல் வேண்டும். எவ்வாறாயினும் இந்தக் காலத்தை அனுமதிப்பத்திரத்திற்கான தகைமை பெறுகின்ற பதவியொன்றில் சேவைக்காலத்தைக் கணக்கிடுவதற்கு மாத்திரம் ஏற்புடையதாக்கிக்கொள்ளுதல் வேண்டும். உரிய காலத்திற்குள் அனுமதிப்பத்திரம் பெறுநர் பல அனுமதிப்பத்திரங்களுக்காக தகைமை பெறக்கூடிய போதிலும், மிகை ஊழியர் அடிப்படையை நீக்கும் தீர்மானம் எடுக்கப்படுகின்ற தினத்தில் செல்லுபடியாகக்கூடிய நிலையில் இருக்கும் சுற்றறிக்கையின் கீழ் ஒரு அனுமதிப்பத்திரத்தை மாத்திரமே வழங்குதல் வேண்டும்.

3.7 மேலே 3.6 இன் பிரகாரம் “தனிப்பட்ட ரீதியில்” அல்லது “மிகை ஊழியர்” அடிப்படையில் என்பது நீக்கப்படும் போது தொடர்புடைய அனுமதிப்பத்திரம் பெறுநர் ஓய்வுபெற்றிருந்த போதிலும் அவர் ஓய்வு பெறுகின்ற தினத்தில் இந்த சுற்றறிக்கையின் பிரகாரம் தகைமை பெற்றிருப்பின் இந்த சுற்றறிக்கை செயல்வலுப்பெறும் நிலையில் இருக்குமானால் மாத்திரம் அந்த சலுகைகளைப் பெற்றுக்கொள்ள முடியும். அவ்வாறான சந்தர்ப்பமொன்றில் அவர் இறுதியாக சேவையாற்றிய அமைச்சின் செயலாளரினால் அந்த அனுமதிப்பத்திரம் வழங்கப்படுதல் வேண்டும்.

3.8 இந்த சுற்றறிக்கையின் கீழ்

(i) தகைமை பெறுகின்றவர் மரணித்திருப்பின் கிடைக்கவேண்டிய அனுமதிப்பத்திரம் வாழ்க்கைத் துணைக்கு அல்லது வாழ்க்கைத் துணை இல்லாத சந்தர்ப்பத்தில் சட்டரீதியான பின்னுரித்தாளரினால் அல்லது பின்னுரித்தாளர்களினால் விடுக்கப்படுகின்ற வேண்டுகோள் மற்றும் விண்ணப்படிவம் ஆகியவற்றின் மூலம் பெறுக்கொள்ள முடியும். எவ்வாறாயினும் பின்னுரித்தாளர்கள் பலர் இருக்கின்ற சந்தர்ப்பத்தில் சகல சட்டரீதியான பின்னுரித்தாளர்களினதும் விருப்பம் கிடைக்கப்பெறுகின்ற சட்டரீதியான பின்னுரித்தாளருக்கு மாத்திரமே இதற்கான வாய்ப்புக் கிடைக்கும்.

(ii) அனுமதிப்பத்திரமொன்றைப் பெற்று அதன் கீழ் வாகனமொன்றைப் பெறுவதற்காக தேவையான நடவடிக்கைகளை செய்துள்ளபோது அல்லது அவ்வாறு பெற்று 05 வருடங்கள் செல்லும் முன்னர் அனுமதிப்பத்திரம் பெறுநர் மரணித்திருப்பின் அந்த அனுமதிப்பத்திரத்தின் அல்லது மோட்டார் வாகனத்தின் சட்டரீதியான உரிமையை வாழ்க்கைத் துணைக்கு பெற்றுக்கொள்ள முடியும். வாழ்க்கைத் துணை இல்லாத சந்தர்ப்பத்தில் சட்டரீதியான பின்னுரித்தாளருக்கு இந்த சலுகையைப் பெற்றுக்கொள்ள முடியும். சட்டரீதியான பின்னுரித்தாளர்கள் பலர் இருக்கின்ற சந்தர்ப்பத்தில் சகல சட்டரீதியான பின்னுரித்தாளர்களினதும் விருப்பம் கிடைக்கப்பெறுகின்ற சட்டரீதியான பின்உரித்தாளருக்கு மாத்திரமே இதற்கான வாய்ப்புக் கிடைக்கும்.

3.9 யாரேனும் உத்தியோகத்தர் ஒருவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கையொன்றின் தீர்மானம் வெளிப்படுத்தப்படும் முன்னர் குறித்த உத்தியோகத்தர் ஓய்வுபெற்ற போதிலும் அந்த தீர்மானத்தின் பிரகாரம் அவர் சகல குற்றச்சாட்டுகளில் இருந்தும் விடுதலை பெருகின்ற சந்தர்ப்பத்தில் உரித்தாகின்ற சலுகையை நடைமுறையிலுள்ள சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் கீழ் பெற்றுக்கொள்ள முடியும்.

3.10 இந்தத் திட்டத்தின் கீழ்

(i) பொதுவாக இந்நாட்டுக்கு இறக்குமதி செய்யக்கூடிய வயது எல்லைக்கு உள்ளடங்குகின்ற இயைபுமுறை குறியீட்டு இலக்கம் (H.S. Headings) 87.03 அல்லது 87.04 இற்கு உரிய மோட்டார் வாகனங்கள் அல்லது டபள்கெப் வாகனங்கள் (Double Cab) ஆகிய வாகன வகைகளில் எந்தவொரு வாகனத்தையும் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கும்.

(ii) பெற்றுக்கொள்ளக்கூடிய வாகனமொன்றின் உயர்ந்தபட்ச சீஜஎப் பெறுமதி ஐக்கிய அமெரிக்க டொலர் 30,000 ஆகும். ஏனைய எந்தவொரு நாணய அலகுகளில் கடன் கடிதத்தைத் திறப்பாரேயானால் அதன் பெறுமதி தொடர்புடைய கடன் கடிதம் திறக்கப்படுகின்ற தினத்தில் காணப்படும் அந்நியச் செலாவணியின் பிரகாரம் ஐக்கிய அமெரிக்க டொலர் 30,000 எல்லையைத் தாண்டலாகாது. கடன் கடிதம் திறக்கப்படுகின்ற சந்தர்ப்பத்தில் சொல்லப்பட்ட எல்லையைத் தாண்டியுள்ள வாகனத்திற்காக எந்தவொரு வரிச் சலுகையும் உரித்தாகாத அதேவேளையில் அவை சாதாரண இறக்குமதியாக (வரிச்சலுகையற்ற) கவனத்திலெடுத்து முழுமையான வரி மற்றும் கட்டணங்கள் இலங்கை சுங்கத் திணைக்களத்தினால் அறவிடப்படுகின்றது. கடன் கடிதங்கள் திறக்கும் போது அனுமதிப்பத்திரம் பெறுநர் இந்த அபாயம் குறித்து கவனம் செலுத்துதல் வேண்டும்.

(iii) அனுமதிப்பத்திரத்தைப் பயன்படுத்தி பெறப்படுகின்ற மோட்டார் வாகனத்திற்காக அனுமதிப்பத்திரம் பெறுநரினால் செலுத்தவேண்டிய மொத்த உற்பத்தி (விசேட ஏற்பாடு) வரித் தொகையில் 50% வரிச் சலுகை கிடைக்கும். வாகனத்தை சுங்கத் திணைக்களத்திலிருந்து விடுவித்துக்கொள்ளும் சந்தர்ப்பத்தில் தொடர்புடைய சுங்க குறிப்பேடு (CUS DEC) சமர்ப்பிக்கப்படுகின்ற சந்தர்ப்பத்தில் காணப்படுகின்ற வரி வீதாசாரங்களினதும் வாகனத்தின் பெறுமதியினதும் பிரகாரம் வரிச்சலுகை கணக்கிடப்படுகின்றது.

(iv) பெற்றுக்கொள்ளப்படுகின்ற மோட்டார் வாகனம் திடீர் விபத்தொன்றுக்கு உள்ளாவதன் மூலம் மீண்டும் பயன்பாட்டிற்கு எடுக்கமுடியாத விதத்தில் சேதத்திற்குள்ளாகின்ற சந்தர்ப்பத்தில் அதன் சிதைவுகளின் உரிமையை தொடர்புடைய காப்புறுதி நிறுவனத்திற்கு மாற்றுவதற்கும் நட்டஈட்டைப் பெறுவதற்கும் அனுமதிப் பத்திரம் பெறுநர்க்கு வாய்ப்புக் கிடைக்கும். அவ்வாறான சந்தர்ப்பத்தில் வாகனத்தின் பதிவுச் சான்றிதழை இரத்துச் செய்யவேண்டிய அதேவேளையில், அதற்குப் பதிலாக அனுமதிப் பத்திரம் பெறுநருக்கு புதிய அனுமதிப்பத்திரமொன்று வழங்கப்படமாட்டாது.

(v) பெறப்படுகின்ற மோட்டார் வாகனத்தை அந்த அனுமதிப்பத்திரம் உரித்தாகின்ற உத்தியோகத்தரின் பெயரில் பதிவுசெய்யவேண்டிய அதேவேளையில், எந்தவொரு

காரணத்தினாலும் (3.8 (I, ii) மற்றும் 3.10 (iv) பிரிவுகளில் காணப்படுகின்ற தேவைப்பாடுகள் தவிர) முதலாவது பதிவுத் திகதியிலிருந்து 05 வருடங்கள் செல்லும் வரை பதிவை மாற்றமுடியாது. எவ்வாறாயினும், 2015.11.20 ஆம் திகதி வரை நடைமுறையிலிருந்த 1/2013 சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் பெற்றுக்கொள்ளப்பட்ட வாகனத்தின் உரிமை மாற்றுவது சம்பந்தமாக 2014.03.25 ஆம் திகதிய 01/(02)/2013 ஆம் இலக்க சுற்றறிக்கையின் நிபந்தனைகளை தொடர்ந்தும் ஏற்புடையதாக்கிக்கொள்ளல் வேண்டும்.

(vi) அனுமதிப்பத்திரமொன்றைப் பெற்றுக்கொள்வதற்காக உத்தியோகத்தர் தகைமை பெறுகின்றார் என்பதை உறுதிப்படுத்தும் பொருட்டு அவரால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள தகவல்கள் பொய்யென உறுதிப்படுத்தப்படும் பட்சத்தில் வழங்கப்படுகின்ற அனுமதிப்பத்திரம் இரத்துச்செய்யப்படும். அவ்வாறான சந்தர்ப்பத்தில் வாகனமொன்றைப் பெற்றிருப்பின் அது தொடர்பாக ஏற்புடையதான சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படும். அதேபோன்று பொய்யான தகவல்களைச் சமர்ப்பிப்பது சம்பந்தமாக சட்டரீதியான விதத்திலும் ஒழுக்காற்றுரீதியிலும் நடவடிக்கை எடுக்கப்படும்.

(vii) வழங்கப்படுகின்ற அனுமதிப்பத்திரம் அதன் கீழ் வாகனமொன்றைப் பெற்றுக்கொள்ளும் வரை செல்லுபடியானதாகும். எவ்வாறாயினும் காலத்திற்குக் காலம் அரசாங்கத்தினால் எடுக்கப்படுகின்ற கொள்கைரீதியான தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதன் மூலம் வாகனமொன்றைப் பெற்றுக்கொள்ளாமல் அனுமதிப் பத்திரமொன்றைப் தம் வசம் வைத்திருப்பதன் மூலம் ஏற்படுகின்ற சேதம் அல்லது நட்டம் குறித்து பொறுப்புக்கூறப்பட மாட்டாது.

(viii) பெற்றுக்கொள்ளப்பட்ட அனுமதிப்பத்திரமோ அல்லது அதன் வங்கிப் பிரதியோ காணாமல் போயிருப்பின் அனுமதிப்பத்திரம் பெறுநரினால் உடனடியாக பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தல் வேண்டும். அதன்பின்னர் அந்த முறைப்பாட்டின் பிரதியொன்றுடன் அந்த அனுமதிப்பத்திரத்தை இரத்துச் செய்யுமாறு விண்ணப்பமொன்றை அனுமதிப்பத்திரத்தை வழங்கிய செயலாளருக்கு வழங்குதல் வேண்டும். அவ்வாறான விண்ணப்பமொன்றைப் பெற்றவுடன் தொடர்புடைய அதிகாரியினால் காணாமல் போன அனுமதிப்பத்திரத்தை இரத்துச்செய்து அது பற்றி சுங்கப் பணிப்பாளர் நாயகம் அவர்களுக்கும் மோட்டார் வாகனப் போக்குவரத்து ஆணையார் நாயகம் அவர்களுக்கும் அறிவித்தல் வேண்டும். அது நாள வரை தொடர்புடைய அனுமதிப்பத்திரம் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பதை இலங்கை சுங்கத் திணைக்களத்திடமிருந்து எழுத்து மூலமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்று இந்தச் சுற்றறிக்கை செயல்வலுப்பெறுமானால் மாத்திரம் மீண்டும் உரிய விதத்தில் விண்ணப்படிவமொன்றைப் பெற்றுக்கொள்வதன் மூலம் அந்த உத்தியோகத்தர்க்கு அனுமதிப்பத்திரமொன்றை வழங்குவதற்கு தடைகள் கிடையாது.

(ix) மோட்டார் வாகனமொன்றை இறக்குமதி செய்வதற்காக அல்லது உள்நாட்டில் தயாரிக்கப்படுகின்ற வாகனமொன்றைக் கொள்வனவு செய்வதற்காக அனுமதிப்பத்திரம் பெறுநரின் பெயரிலேயே முறையான விதத்தில் கடன் கடிதத்தைத் திறப்பது அல்லது உள்நாட்டில் தயாரிக்கப்படுகின்ற இறக்குமதிக்கு முறையாக கொடுப்பனவுகளை மேற்கொண்டு அதன்பொருட்டு பற்றுச்சீட்டொன்றைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

3.11 தாபன விதிக்கோவையின் II இரண்டாவது தொகுதியின் 48 ஆம் அத்தியாயத்தின் I ஆம் அட்டவணையில் உள்ளடங்குகின்ற குற்றத்தின் கீழ் அந்தத் தொகுதியின் 24:3 பிரிவில் குறிப்பிடப்படுகின்ற பிரதான தண்டனை அல்லது வேறு ஏற்பாடொன்றின் கீழ் அதற்குச் சமனான தண்டனையொன்றைப் பெற்றுள்ள உத்தியோகத்தர் தொடர்பில் பின்வரும் பிரிவு (3.12) பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.12 மேலே 3.5, 3.6, 3.7, 3.8, 3.9, 3.10 (iv) மற்றும் 3.11 தொடர்பில் இறுதித் தீர்மானத்தை எடுப்பதற்காக தொடர்புடைய செயலாளரின் பரிந்துரை வியாபார மற்றும் முதலீட்டுக் கொள்கைத்

திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் அவர்களுக்கு அனுப்புதல் வேண்டும். அவ்வாறான விண்ணப்பங்கள் கிடைக்கும் போது தொடர்ந்தும் பரிசீலனை செய்து தீர்மானமொன்றை வழங்குவதற்கு அல்லது தேவையான சந்தர்ப்பத்தில் இதன் 5.1 பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

4. நடவடிக்கை முறை

4.1 இந்தத் திட்டத்தின் கீழ் அனுமதிப்பத்திரமொன்றைப் பெற்றுக்கொள்வதற்கான தகைமையைப் பூர்த்திசெய்துள்ள உத்தியோகத்தர்கள் மாத்திரம் இந்தச் சுற்றறிக்கையின் "இணைப்பு III" இன்கீழ் விண்ணப்பப்படிவத்தின் மூலம் கோரிக்கையொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும். (கணனிமயப்படுத்தும் வசதிக்காக விண்ணப்பப்படிவங்களை ஆங்கில மொழியில் மாத்திரம் நிரப்புதல் வேண்டும்). விண்ணப்பதாரர்களினால் சமர்ப்பிக்கப்படுகின்ற விண்ணப்பப்படிவங்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ள தகவல்கள் சட்டரீதியான வெளிப்படுத்தல்களாகக் கருதப்படுகின்றன. அதனால் தெளிவற்றவிதத்தில் தகவல்களை வழங்குதல், விண்ணப்பப்படிவத்தில் நிரப்பவேண்டிய பகுதிகளை விட்டுவிடுதல் மற்றும் பொய்யான தகவல்களை வழங்குதல் ஆகியவற்றின் அடிப்படையில் அனுமதிப்பத்திரம் தாமதமடைதல் அல்லது கிடைக்காதிருத்தல் குறித்த் முழுமையான பொறுப்பு அனுமதிப்பத்திர விண்ணப்பதாரியினால ஏற்கப்படுதல் வேண்டும்.

4.2 பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்களை பின்வரும் ஆவணங்களுடன் சேர்த்து தொடர்புடைய திணைக்களத்தின் தலைவருக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

(i) முதற்தடவையாக அனுமதிப்பத்திரத்திற்காக விண்ணப்பிக்கும் போது நியமனக் கடிதம் மற்றும் சேவையில் நிரந்தரமாக்கப்பட்ட கடிதம்.

(ii) இரண்டாவது தடவையாக அனுமதிப்பத்திரத்திற்காக விண்ணப்பிக்கும் போது முதற்தடவை வரிச் சலுகையின் கீழ் பெற்றுக்கொண்ட மோட்டார் வாகனத்தைப் பதிவுசெய்த சான்றிதழ்.

(iii) தொலைந்த அனுமதிப்பத்திரத்திற்குப் பதிலாக புதிய அனுமதிப்பத்திரத்திரமொன்றுக்கு விண்ணப்பிக்கும் போது மேற்குறிப்பிட்ட ஆவணங்களுக்கு மேலதிகமாக தொலைந்து போனதற்காக பொலிஸ் நிலையத்தில் செய்யப்பட்ட முறைப்பாட்டின் பிரதியொன்றையும் அதன் பிரகாரம் தொடர்புடைய அனுமதிப்பத்திரத்தை இல்லாதொழிக்கும் கடிதத்தின் பிரதியும்.

(iv) இந்த சுற்றறிக்கைக்கு மேலதிகமாக தொடர்புடைய விண்ணப்பதாரியின் உண்மைத்தன்மையை உறுதிப்படுத்துவதற்காக தொடர்புடைய அனுமதிப்பத்திரத்தை வழங்கும் உத்தியோகத்தர் பொருத்தமானதெனக் கருதுகின்ற எந்தவொரு ஆவணமும்.

(v) விண்ணப்படிவமொன்றைச் சமர்ப்பிக்கும் போது இந்த சலுகையின் கீழ் ஏற்கனவே கொண்டுவரப்பட்ட வாகனம் பற்றி மேலும் பரிசீலனை செய்வது பொருத்தமானது என அனுமதிப்பத்திரத்தை வழங்குகின்ற உத்தியோகத்தர்க்கு தோன்றுமேயானால் அதுபற்றி இலங்கை சுங்கத் திணைக்களத்திலும் மோட்டார் வாகனப் போக்கவரத்துத் திணைக்களத்திலும் விசாரணை செய்து சான்றுப்படுத்திக்கொள்ளுதல் வேண்டும்.

4.3 அனுமதிப்பத்திரமானது, அனுமதிப்பத்திரம் பெறுநரினால் சமர்ப்பிக்கப்படுகின்ற தகவல்களை அடிப்படையாகக்கொண்டு வழங்கப்படுகின்றபடியினால், அந்தத் தகவல்களின் உண்மைத் தன்மை பற்றியும் சமர்ப்பிக்கப்பட்டுள்ள தகவல்கள் பொய்யானதல்ல என்பதையும் உறுதிப்படுத்திக் கொண்டதன் பின்னர் மாத்திரமே திணைக்களத்தின்/நிறுவனத்தின் தலைவரினால் விண்ணப்பப்படிவம் பரிந்துரை செய்யப்படவேண்டிய அதேவேளையில் அனுமதிப்பத்திரத்தை வழங்குவதற்கு முன்னர் அனுமதிப்பத்திரத்தை வழங்குகின்ற உத்தியோகத்தரும் அதுபற்றி திருப்திப்படுதல் வேண்டும்.

4.4 இந்தத் திட்டத்தின் கீழ் அனுமதிப்பத்திரத்தை வழங்குவதற்காக இந்தச் சுற்றறிக்கையின் "இணைப்பு II" மூலம் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களின் செயலாளர்களுக்கு இதன் மூலம் அதிகாரமளிக்கப்படுகின்றது. அதேபோன்று வழங்கப்படுகின்ற சகல அனுமதிப்பத்திரங்களினதும் பிரதியொன்றை பின்வரும் விதத்தில் தொடர்புடைய கோப்புகளுக்கும் நிறுவனங்களுக்கும் அனுமதிப்பத்திரத்தை வழங்குகின்ற சந்தர்ப்பத்திலேயே அனுப்புதல் வேண்டும்.

(i) உத்தியோகத்தரின் தனியாள் ஆவணக் கோப்பு
(ii) பணிப்பாளர் நாயகம் - வியாபார மற்றும் முதலீட்டுக்கொள்கை திணைக்களம்
(iii) பணிப்பாளர் நாயகம் - இலங்கை சுங்கத் திணைக்களம்
(iv) ஆணையாளர் நாயகம் - மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களம்
(v) கணக்காய்வாளர் அதிபதி - கணக்காய்வாளர் அதிபதி திணைக்களம்

4.5 இந்த சுற்றறிக்கையின் கீழ் வழங்கப்படுகின்ற அனுமதிப்பத்திரமொன்றின் அடிப்படையில் மோட்டார் வாகனமொன்றைப் பெற்றுக்கொண்டவுடன் அது தொடர்பான சுங்க குறிப்பேடு அல்லது தேசிய ரீதியில் கொள்வனவு செய்யும் போது கிடைக்கின்ற விலைப்பட்டியலின் பிரதியொன்றினை அனுமதிப்பத்திரம் பெறுநரினால் தனது தனியாள் ஆவணக் கோப்புக்கு சேர்க்கும் பொருட்டு தனது சேவை நிலையத்திற்கு வழங்கவேண்டிய அதேவேளையில் அதனை தனிப்பட்ட கோவையில் சேர்க்கப்பட்டுள்ளதாக திணைக்களத் தலைவர் திருப்திப்படுதல் வேண்டும்.

## 5. ஏனைய விடயங்கள்

5.1 இந்தத் திட்டத்தின் கீழ் அனுமதிப்பத்திரமொன்றைப் பெற்றுக்கொள்வதற்கு தகைமை பெறுகின்ற பதவி மற்றும் ஏற்பாடுகள் பற்றிய பொருள்கோடல் மற்றும் நிச்சயமற்ற தன்மைகள் சம்பந்தமான பிரச்சினைகள் ஏற்படுமானால் வியாபார மற்றும் முதலீட்டுக் கொள்கைத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் அவர்களிடம் விசாரித்தல் வேண்டும். அப்போது தொடர்புடைய விடயங்களை பரிசீலனைசெய்து தீர்மானமொன்றை வழங்குவது அல்லது மேலும் தேவைப்படுமானால் திறைசேரியின் பிரதிச் செயலாளரின் தலைமையில் இடம்பெறுகின்ற குழுவுக்கு தொடர்புடைய விடயத்தைச் சமர்ப்பித்து இறுதித் தீர்மானமொன்று வழங்குவது மேற்கொள்ளப்படும்.

5.2 இந்த சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு அமைவாக தகைமை பெறுகின்ற உத்தியோகத்தர்களுக்கு மாத்திரம் அனுமதிப்பத்திரம் வழங்குவது சகல செயலாளர்களதும் பொறுப்பாகும்.

5.3 இவ்வாறு பெற்றுக்கொள்ளப்பட்ட அனுமதிப்பத்திரத்தின் கீழ் முறையே இறக்குமதி செய்யப்படுகின்ற அல்லது உள்நாட்டில் கொள்வனவு செய்யப்படுகின்ற வாகனங்கள் சம்பந்தமாக இலங்கை சுங்கத் திணைக்களத்தினால் அல்லது உள்நாட்டில் தொடர்புடைய வாகனத்தை வழங்குகின்ற நிறுவனத்தினால் பின்வரும் தகவல்களை மாதாந்தம் அடுத்துவரும் மாதத்தின் முதலிரண்டு வாரங்களுக்குள் வியாபார மற்றும் முதலீட்டுக் கொள்கைத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் அவர்களுக்கும் அரசிறைக் கொள்கைத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் அவர்களுக்கும் சமர்ப்பித்தல் வேண்டும்.

(i) அனுமதிப்பத்திர இலக்கம்
(ii) அனுமதிப்பத்திரம் பெறுநரின் பெயர், பதவி, நிறுவனம் மற்றும் அமைச்சு
(iii) மோட்டார் வாகனத்தின் பெறுமதி
(iv) வரியின் பெறுமதி பற்றிய விபரம் (மொத்த, வெட்டி நீக்கப்பட்ட மற்றும் செலுத்தப்பட்ட)

5.4 இந்தத் திட்டத்தின் கீழ் பெற்றுக்கொள்ளப்பட்ட அனுமதிப்பத்திரத்தின் அடிப்படையில் இறக்குமதி செய்யப்பட்ட அல்லது உள்நாட்டில் பெற்றுக்கொள்ளப்பட்ட வாகனத்தின் முதல் பதிவுத் திகதியிலிருந்து 05 வருடங்கள் தாண்டிய பின்னர் வரி செலுத்தாமல் மற்றுமொருவருக்கு உரிமை மாற்றுவதற்கு மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளருக்கு முடியும்.

5.5 இதன் கீழ் வழங்கப்படுகின்ற அனுமதிப்பத்திரங்கள் தொடர்பாக தெளிவான தகவல் முறையொன்றை பேணுவதற்காக இந்தத் திட்டத்தின் கீழ் சமர்ப்பிக்கவேண்டிய விண்ணப்பப்படிவம் மற்றும் வழங்கபப்படவேண்டிய அனுமதிப்பத்திரத்தை இலக்கமிடவேண்டிய விதம் "இணைப்பு I" இல் காட்டப்பட்டுள்ளது.

5.6 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு தாம் வகிக்கும் பதவியின் பிரகாரம் வரிச்சலுகையின் கீழ் வாகனமொன்றைப் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்பொன்றை வழங்குவது அவர்களுக்கு தனிப்பட்ட ரீதியில் வழங்கப்பட்டுள்ள விசேட வரப்பிரசாதமாகும். உத்தியோகத்தரின் தேவைப்பாட்டின் பிரகாரம் அனுமதிப்பத்திரத்தின் கீழ் பெறப்பட்டுள்ள மோட்டார் வாகனத்தை இந்த சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளை மீறி மற்றுமொருவருக்கு உரிமை மாற்றுவது தண்டனைக்குரிய குற்றமாகும். அந்தவிதத்தில் தொடர்புடைய நிபந்தனைகளை மீறாதிருப்பதற்கு அனுமதிப்பத்திரம் பெறுநர் கவனம் கொள்ள வேண்டிய அதேவேளையில் அவ்வாறு மீறப்படுகின்ற சந்தர்ப்பங்களில் காணப்படும் சட்டத்தின் கீழ் அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும். மேலும் சலுகை அடிப்படையில் அனுமதிப்பத்திரத்தைப் பயன்படுத்தி ஏதேனும் முரண்பாடுகள் மேற்கொள்ளப்படுமானால் அதன் மூலம் அரசாங்கத்தின் வருமானத்திற்கு ஏற்படுகின்ற பாதகமான தாக்கத்தைத் தவிர்த்து இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவது இந்த உரிமையைப் பெறுகின்ற சகல அரசாங்க உத்தியோகத்தர்களினதும் பொறுப்பாகும்.

5.7 இந்த நிபந்தனைகள் மற்றும் சலுகைகள் 2015.11.21 ஆம் திகதி முதல் செயல்வலுப் பெறுகின்றது.

**ஒப்பம்./ ஆர்.எச்.எஸ். சமரதுங்க**

**பொதுத் திறைசேரியின் செயலாளர் மற்றும்**

**நிதி அமைச்சின் செயலாளர்**

பிரதிகள்:

| | | | |
|---|---|---|---|
| 01. | கணக்காய்வாளர் அதிபதி | - | தேவையான நடவடிக்கைகளுக்காக |
| 02. | மத்திய வங்கியின் ஆளுநர் | - | தேவையான நடவடிக்கைகளுக்காக |
| 03. | பணிப்பாளர் நாயகம், வியாபார மற்றும் முதலீட்டுக் கொள்கைத் திணைக்களம் | - | மேற்குறிப்பிட்ட விதமாக நடவடிக்கை எடுப்பதற்காக |
| 04. | பணிப்பாளர் நாயகம், அரசிறைக் கொள்கைத் திணைக்களம் | - | தேவையான நடவடிக்கைகளுக்காக |
| 05. | பணிப்பாளர் நாயகம், இலங்கை சுங்கத் திணைக்களம் | - | தேவையான நடவடிக்கைகளுக்காக |
| 06. | பணிப்பாளர் நாயகம், முகாமைத்துவ சேவைத் திணைக்களம் | - | தேவையான நடவடிக்கைகளுக்காக |
| 07. | பணிப்பாளர் நாயகம், பொதுத் தொழில் முயற்சித் திணைக்களம் | - | தேவையான நடவடிக்கைகளுக்காக |
| 08. | ஆணையாளர் நாயகம், மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களம் | - | தேவையான நடவடிக்கைகளுக்காக |
| 09. | ஆணையாளர் நாயகம், உள்நாட்டு இறைவரித் திணைக்களம் | - | தேவையான நடவடிக்கைகளுக்காக |
| 10. | பணிப்பாளர் நாயகம், முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களம் | - | தேவையான நடவடிக்கைகளுக்காக |

இணைப்பு I

**விண்ணப்பபடிவம் மற்றும் அனுமதிப்பத்திரம் ஆகியவற்றை இலக்கிமிடவேண்டிய முறை**

01. இதன் "இணைப்பு III" என தரப்பட்டுள்ள விண்ணப்பப்படிவத்தின் "அ" பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பப்படிவ இலக்கத்தை அனுமதிப்பத்திரத்தை வழங்குகின்ற நிறுவனத்திற்கு விண்ணப்பப்படிவம் கிடைக்கின்ற ஒழுங்குமுறையில் இலக்கமிடவும்.

02. இதன் "இணைப்பு IV" இல் வழங்கவேண்டிய அனுமதிப்பத்திரத்தின் மாதிரி தரப்பட்டுள்ளது. அதில் குறிப்பிடப்பட்டுள்ள அனுமதிப்பத்திர இலக்கம் (Permit Number) தொடர்புடைய அனுமதிப்பத்திரம் வழங்கும்போது பின்வரும் விதமாக சரியாக இலக்கமிடவும்.

03. மேற்குறிப்பிடப்பட்டுள்ள "அனுமதிப்பத்திர இலக்கம்" ஏழு பகுதிகளைக்கொண்டதாகும். அதில் 01,02,03 மற்றும் 05 பகுதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள இலக்கங்களை மாற்றக்கூடாது. அதேவேளையில் தொடர்புடைய அனுமதிப்பத்திரங்களை வழங்குகின்ற நிறுவனத்தின் மூலம் அந்த இலக்கத்தின் 04,06 மற்றும் 07 ஆகிய பகுதிகளை பின்வரும் விதமாக பூர்த்திசெய்து அனுமதிப்பத்திரத்தை வழங்குதல் வேண்டும்.

**i. நான்காவது பகுதி**

இதன் "இணைப்பு II" இல் குறிப்பிடப்பட்டுள்ள விதமாக தமது நிறுவனத்திற்குரிய "குறியீட்டு இலக்கத்தை" சேர்க்கவும்.

> உதாரணமாக: காணி அமைச்சின் செயலாளரினால் வழங்கப்படுகின்ற அனுமதிப்பத்திரங்களில் இந்தக் குறியீட்டு இலக்கம் "122" ஆகும்.

**ii. ஆறாவது பகுதி**

அனுமதிப்பத்திரம் வழங்குகின்ற திகதிக்கு உரிய வருடத்தின் இறுதி இரண்டு இலக்கத்தை இதில் சேர்த்தல் வேண்டும்.

> உதாரணமாக: 2016 ஆம் ஆண்டில் வழங்கப்படுகின்ற அனுமதிப்பத்திரங்களில் இந்த இலக்கம் "16" ஆகும். 2017 ஆம் ஆண்டில் ஆயின் அந்த இலக்கம் "17" ஆகும்.

**iii. ஏழாவது பகுதி**

தொடர்புடைய அனுமதிப்பத்திரம் வழங்கப்படுகின்ற ஒழுங்குமுறை (விண்ணப்படிவம் கிடைக்கின்ற ஒழுங்குமுறை அல்ல) பிரகாரம் நான்கு இலக்கங்களைக் கொண்டதாகக் குறிப்பிடவும்.

> உதாரணமாக : முதலாவதாக வழங்கப்படுகின்ற அனுமதிப்பத்திரத்தின் இலக்கம் "0001" ஆகும். ஏழாவது அனுமதிப்பத்திரமாயின் அது "0007" ஆகும்.

04. ஏதேனும் காரணங்களின் அடிப்படையில் "இணைப்பு II" இல் குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனங்களின் பெயரில் மாற்றங்கள் இருப்பின் (உதாரணமாக: புதிதாக அமைச்சொன்றை ஏற்படுத்துதல், தற்போதிருக்கின்ற இரண்டு நிறுவனங்கள் அல்லது அதிக எண்ணிக்கையிலான ஒன்றுசேர்த்தல் போன்ற) அவ்வாறான சந்தர்ப்பத்தில் அனுமதிப்பத்திரத்தை வழங்குவதற்கு முன்னர் தொடர்புடைய நிறுவனத்தின் தலைவரினால்/ தலைவர்களினால் வியாபார மற்றும் முதலீட்டுக் கொள்கை திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் அவர்களிடம் எழுத்துமூலமான வேண்டுகோளொன்றை விடுத்து புதிய "குறியீட்டு இலக்கத்தை" தமது நிறுவனத்தின் பொருட்டு பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். அப்போது கோரிக்கையொன்று கிடைக்கப்பெற்றவுடன் தொடர்புடைய மாற்றத்தைக் கவனத்திலெடுத்து திருத்தப்பட்ட "குறியீட்டு இலக்கத்தை" அல்லது புதிய குறியீட்டு இலக்கமொன்றை தொடர்புடைய நிறுவனத்தின் பொருட்டு வழங்கப்படும். அப்போது அப்புதிய இலக்கத்தைப் பயன்படுத்தி உரிய அனுமதிப்பத்திரத்தை வழங்குதல் வேண்டும்.

"இணைப்பு III"

### வியாபார மற்றும் முதலீட்டுக் கொள்கைச் சுற்றறிக்கை இலக்கம் 01/2016 இன் கீழ் சலுகை அடிப்படையில் மோட்டார் வாகன அனுமதிப் பத்திரமொன்றைப் பெற்றுக் கொள்வதற்கான விண்ணப்பப் படிவம்

**“அ” பிரிவு**

***அனுமதிப் பத்திரம் வழங்கப்படுகின்ற அலுவலகத்தின் உபயோகத்திற்காக மாத்திரம் (இணைப்பு I இன் பிரகாரம்)***

**விண்ணப்பப்படிவ இலக்கம்** ☐

---

( இந்த விண்ணப்பப் படிவத்தைப் பூர்த்திசெய்ய முன்னர் உரிய சுற்றறிக்கையை நன்றாக வாசிக்கவும்)

**“ஆ” பிரிவு - உத்தியோகத்தர் பற்றிய தனிப்பட்ட விபரம்**

01. பெயர்: (ஆங்கில பெரிய எழுத்துக்களில் மாத்திரம்) எழுத்துக்களையும் சொற்களையும் வேறுபடுத்துவதற்காக அதற்கு இடைப்பட்ட கூண்டு ஒன்றை வெறுமையாக வைக்கவும்

1.1 முதலெழுத்துக்களுடன் பெயர் :

| | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | |

1.2 முழுப் பெயர் :

| | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | |

02. தேசிய அடையாள அட்டை இல.:

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

03. தனிப்பட்ட முகவரி :

| | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | |

04. தனிப்பட்ட தொலைபேசி இல. :

| நிலையான | | | | | | | | | | செல்லிட | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | | | | | | | | | |

05. இதற்கு முன்னர் பெற்றுக் கொண்ட சலுகை அடிப்படையிலான மோட்டார் வாகன அனுமதிப் பத்திரம் பற்றிய விபரம்:

| | திகதி | | மாதம் | | வருடம் | | | | புதிவசெய்த திகதி |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | | | | | | | |
| 2 | | | | | | | | | |

**“இ” பிரிவு - உத்தியோகத்தரின் பதவி மற்றும் சேவை நிலையம் பற்றிய விபரம்**

06. பதவி மற்றும் சேவை நிலையம்:

6.1 தற்போதைய பதவி (ஆங்கில பெரிய எழுத்துக்களில் மாத்திரம்)

| | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | |

6.2 தற்போதைய பதவிக்கு நியமிக்கப்பட்ட திகதி:............. மாதம்:................. வருடம்:..............

6.3 தற்போதைய பதவியின் தரம்: --------------------------- மற்றும் வகுப்பு : ------------------

6.4 தற்போதைய பதவிக்குரிய சம்பளத் தொகுதி :--------------------------------------------

6.5 தற்போதைய சேவை நிலையம்:

| | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | |

6.6 சேவை நிலையத்தின் முகவரி:

| | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | |

6.7 தொலைபேசி இலக்கம் மற்றும் தொலை நகல் இல.:

| தொலைபேசி | | | | | | | | | | தொலை நகல் | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | | | | | | | | | |

6.8 தற்போதைய சேவை நிலையத்திற்குரிய அமைச்சு / மாகாண சபை: (ஆங்கில பெரிய எழுத்துக்களில் மாத்திரம்)

| | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | |

6.9 இந்தச் சுற்றறிக்கையின் கீழ் தகைமை பெறுகின்ற பதவியொன்றுக்கு நியமிக்கப்பட்ட திகதி: .........மாதம்:........வருடம்:..........

6.10 அந்தப் பதவியில் நிரந்தரமாக்கப்பட்டுள்ளீரா? : ------------------

6.11 அந்தப் பதவியில் நிரந்தரமாக்கப்பட்டிருப்பின் நிரந்தரமாக்கப்பட்ட திகதி:.........மாதம்:........வருடம்:..........

6.12 சேவைக் காலம் பற்றிய விபரம்: (தற்போதைய பதவியிலிருந்து ஆரம்பிக்கவும்)

| பதவி மற்றும் சேவை நிலையம் | முதல் | | | வரை | | | மொத்த சேவைக் காலம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | திகதி | மாதம் | வருடம் | திகதி | மாதம் | வருடம் | திகதி | மாதம் | வருடம் |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |
| மொத்தம் | | | | | | | | | |

6.13 சம்பளமற்ற சேவைக் காலம் பற்றிய விபரம்:

| பதவி மற்றும் சேவை நிலையம் | முதல் | | | வரை | | | மொத்த சேவைக் காலம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | திகதி | மாதம் | வருடம் | திகதி | மாதம் | வருடம் | திகதி | மாதம் | வருடம் |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |
| மொத்தம் | | | | | | | | | |

---

**"ஈ" பிரிவு - வாழ்க்கைத் துணை மற்றும் பின்னுரித்தாளர் பற்றிய விபரம்**

07. வாழ்க்கைத் துணை /பின்னுரித்தாளர் பற்றிய விபரம்

7.1 வாழ்க்கைத் துணையின் முழுப் பெயர்:

7.2 வாழ்க்கைத் துணையின் தேசிய அடையாள அட்டை இல.:

7.3 விவாகமாகாதவராயின் பின்னுரித்தாளரின் முழுப் பெயர்:

7.4 பின்னுரித்தாளரின் தேசிய அடையாள அட்டை இல.:

---

**"உ" பிரிவு - விண்ணப்பதாரரின் வெளிப்படுத்துகை**

மேலே என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் எனது அறிவுக்கு எட்டிய வரையில் சரியானதும் உண்மையானதும் என சான்றுப்படுத்துகிறேன். என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் மற்றும் ஆவணங்கள் பொய்யானதெனவோ அல்லது வழங்கப்பட்டுள்ள தகவல்கள் போதுமானதாக இல்லையெனவோ கண்டறியப்பட்டால், எனது விண்ணப்பப் படிவம் நிராகரிக்கப்படும் என்பதையும், பொய்யான தகவல்களை சமர்ப்பித்தமையின் அடிப்படையில் நிலவும் சட்டதிட்டங்களின் கீழ் தண்டனை பெற நேரிடும் என்பதையும் நான் அறிவேன். மேலும் வாகனமொன்றைப் பெற்றுக் கொள்வதற்கு முன்னர் அல்லது பெற்றுக் கொண்ட பின்னர் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் பொய்யானதெனக் கண்டறியப்பட்டால் உரிய சலுகைகளை இழப்பதற்கும் கிடைத்த சலுகைகளை மீண்டும் அரசாங்கத்திற்குச் செலுத்துவதற்கும் நிலவும் சட்டத்தின் கீழ் விதிக்கப்படுகின்ற எந்தவொரு தண்டனைக்கும் ஆளாவதற்கும் உடன்படுகிறேன்.

............................................ ..................................................

திகதி விண்ணப்பதாரரின் கையொப்பம்

## "ஊ" பிரிவு - நிறுவனத் தலைவரின் பரிந்துரை

எனது இலக்கம் (1)--------------------------------

செயலாளர்,

(2) ----------------------------------------------

(3)-------------------------------------------------------------- இல் (4)---------------------------------------------
-- பதவியில் சேவையாற்றுகின்ற வண. / திரு/செல்வி/திருமதி (5)-----------------------------------------------
------ அவர்களினால் இந்த (6)--------------------------------------------------------- இற்கு (7) ---------------
திகதியைக் கொண்டதாக வியாபார மற்றும் முதலீட்டுக் கொள்கைச் சுற்றறிக்கை இலக்கம் 01/2016 இன் கீழ் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விண்ணப்பப்படிவம் மற்றும் அதனுடன் அனுப்பப்பட்டுள்ள ஆவணங்களைப் பரிசீலனை செய்தேன்.

அதன் பிரகாரம் இந்த உத்தியோகத்தர் விண்ணப்பப்படிவத்தை உரிய முறையில் பூர்த்தி செய்து தேவையான ஆவணங்களை சமர்ப்பித்தள்ளார் எனச் சான்றுப்படுத்துகிறேன். அதேபோன்று இந்த உத்தியோகத்தர் மேற்குறிப்பிட்ட சுற்றறிக்கையின் கீழ் தகைமை பெறுகின்ற பதவியொன்றில் நிரந்தரமாக்கப்பட்டுள்ளார் என்பதையும் சான்றுப்படுத்துகிறேன். வழங்கப்பட்டுள்ள தகவல்களுக்கு அமைவாக இந்த உத்தியோகத்தர் வியாபார மற்றும் முதலீட்டுக் கொள்கைச் சுற்றறிக்கை இலக்கம் 01/2016 இல் (8)------------------------ தொகுதி / தொகுதிகளின் கீழ் தகைமை பெற்றுள்ளார். அதனால் மேற்குறிப்பிட்ட வண./திரு/செல்வி/திருமதி (5) ----------------------------------------------- அவர்களுக்கு சொல்லப்பட்ட சுற்றறிக்கையின் கீழ் சலுகை அடிப்படையிலான வாகன அனுமதிப் பத்திரமொன்றை வழங்குவதனை பரிந்துரை செய்கிறேன்.

| | |
|---|---|
| -------------------- | ............................................................... |
| திகதி | நிறுவனத் தலைவரின் கையொப்பம் மற்றும் அலுவலக முத்திரை |

*மேற்குறிப்பிட்ட இந்தப் பகுதிகளிலுள்ள இலக்கங்களுக்குரிய விபரம் பின்வருமாறு.*
*(1) உத்தியோகத்தர் சேவையாற்றுகின்ற நிறுவனத்தின் கடிதக் கோப்பு இலக்கம், (2) விண்ணப்பதாரர் உரித்தாகின்ற நிறுவனம்/ ஆணைக்குழு/ மாகாண சபை/ நிரல் அமைச்சு (3) விண்ணப்பதாரரின் தற்போதைய சேவை நிலையம், (4) விண்ணப்பதாரரின் தற்போதைய பதவி, (5) விண்ணப்பதாரரின் பெயர் (6) சான்றுப்படுத்துகின்ற நிறுவனத் தலைவரின் நிறுவனம், (7) விண்ணப்பப் படிவத்தின் திகதி (8) சுற்றறிக்கையின் 01 ஆம் பிரிவின் கீழ் தகைமை பெறுகின்ற தொகுதி அல்லது தொகுதிகள்*

---

## "எ" பிரிவு
## செயலாளரின் அனுமதி

எனது இலக்கம் ........................................

மேலேயுள்ள விண்ணப்பப்படிவத்தை அனுமதிக்கிறேன்/அனுமதிக்கவில்லை.

| | |
|---|---|
| ................................ | ............................................. |
| திகதி | செயலாளரின் ஒப்பம் மற்றும் அலுவலக முத்திரை |